சித்தூர்,

3/10/2014

மதிப்பிற்குரிய அம்மா அவர்களுக்கு,

சிறை விலாசத்துக்கு இந்த கடிதம் எழுதுவதை அவமதிப்பாக எண்ண மாட்டீர்கள் என்று நம்புகிறேன். சிறை அதிகாரிகளின் தணிக்கைக்கு பிறகே இந்த கடிதம் தங்கள் கைக்கு வரும் என்று ஊகிக்கிறேன். ஆனாலும் இதில் நாட்டு நலன்,மானில நலன் சார்ந்த விஷயங்களே இருப்பதால் தான் இந்த கடிதத்தை சிறை முகவரிக்கே அனுப்புகிறேன்.

சொத்துக்குவிப்பு -அது மீதான வழக்கு -தீர்ப்பு -தங்கள் சிறை வாசம் ஆகிய விஷயங்களில் எனக்கு மாற்று கருத்து இருக்கிறது. ஆனாலும் தீர்ப்புக்கு பிறகான தங்கள் கட்சியினரின் எதிர்வினைகள் உங்கள் நோக்கங்களை நிச்சயம் சிதைக்கும் மாற்றி யோசிக்க வேண்டிய தருணம் இது என்பதை சொல்வதில் எனக்கு தயக்கமில்லை.

இந்த கடிதத்துடன் இணைத்துள்ளவற்றின் சுருக்கங்கள்

1.நதிகளை இணைக்க ஒரு மாற்று திட்டம் - இதன் 234+234 பிரதிகள் தமிழக சட்டமன்ற சபா நாயகர் -அலுவலகத்திலும் தங்கள் இல்லத்திலும் முடக்கப்பட்டிருக்கின்றன. இதன் ஒரு பிரதி தங்கள் கட்சி அலுவலகத்துக்கும் சென்றிருக்கிறது.

2.என் திட்டம் - அதன் அவசியம் - இதன் அமலுக்கான என் முயற்சிகள் .

3.இந்த திட்டத்தின் ஒரு பிரதி துணை சபா நாயகர் அலுவலகத்திலும் 1998 முதல் கிடப்பில் இருக்கிறது.இது குறித்து திரு தம்பிதுரை அவர்களுக்கு நான் எழுதிய ஓப்பன் லெட்டர்.

குறிப்பு: மேற்படி திட்டம் - அதன் பின்னுள்ள ஆராய்ச்சி - இதற்கான என் முயற்சிகள் சரி என்று பட்டால் சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் போட்டு

மத்திய அரசுக்கு அனுப்பலாம். மேலும் முதல் கட்டமாக தென்னக முதல்வர்களை திரு பன்னீர் சந்தித்து ஆதரவு திரட்டலாம். பிறகு வட மானில முதல்வர்கள்

5.முதல் 4 இணைப்புகள் விஷயத்தில் நாட்டு நலனோடு உங்கள் கட்சி நலன், சொந்த நலனும் பாதிக்கப்படும். அகில இந்திய அளவில் பாதிக்கப்பட்டுள்ள உங்கள் இமேஜ் உயர வாய்ப்பிருக்கிறது.

6.அடுத்து வரும் மானில கனவுகள் என்ற இந்த இணைப்பு உங்கள் அரசாலேயே அமல் படுத்தக்கூடிய அம்சங்கள் தான்.உடனடியாக இதன் அமலுக்கு ஒரு கமிட்டி போட்டு அதன் சிபாரிசின் படி முன்னுரிமை உள்ள விஷயங்களை தீர்மானித்து படிப்படியாக அமல் படுத்த துவங்கி விட்டால் மானில நிர்வாகம் பூஸ்ட் ஆவதோடு -தீர்ப்புக்கு பிறகான குழப்படிகள் மறக்கப்படும்.

தங்கள் உண்மையுள்ள,

சித்தூர்.முருகேசன்